உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

# வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை,

கும்பகோணம்.

-----------------

ப்ரசுரம் 41.

## ஆசாரம்.

“ஆசாரம்” என்றால் பெரியோர்களின் நடத்தையை நன்கு பார்த்து, கேட்டு, அனுஷ்டிப்பது என்பது பொருள். இத்தகைய ஆசாரமுள்ள மனிதர்களைப் பார்த்து ரிஷிகளும் புகழ்கின்றனர்.

மனு:-

ஸூஉாராாஜ்லஹதெ ஹ்ாயுராஉாராஜீவீஷிதாஃ வ்ரஜாஃ ।

ஸூஉாராாஜநஜக்ஷயு்ம் ஸூஉாரொாஹஜ்ஞக்ஷணீ ॥

ஆசாரத்தால் ஆயுளை அடையலாம்; ஆசாரத்தால் விரும்பப்பட்ட ப்ரஜையை அடையலாம்; ஆசாரத்தால் அழிவற்றதனம் பெறலாம்; ஆசாரம் அலட்சுமியைத் தடுக்கும்; என்றார். ஆசாரமில்லாதவனை நிந்திக்கிறார்.

உுராாஉாரொாஹி வுுஷொ யொகெ ஹவதி நிநுஜிதஃ ।

உுஃவஹாமீ உ ஸததம் வ்ாயிதொzலாயுரெவஉ ॥

துராசாரமுள்ள புருஷன் உலகில் நிந்திக்கப்படுவான். எப்போதும் துக்கத்தை அடைந்து வ்யாதி யுள்ளவனாயும் அல்ப ஆயுள் உள்ளவனாகவும் ஆவான் என்கிறார். ஆகவே தர்மானுஷ்டான முள்ளவனுக்குக் கிடைப்பதும், அதில்லாதவனுக்குக் கிடைப்பதும் தெற்றென விளங்குகிறது. மற்றும், இவ்வித ஆசாரம் உள்ளவனுக்கும் இல்லாதவனுக்கும் ஸாமான்யமாய்க் கூறியதோடு நிற்காமல், ப்ராம்ஹணனுக்கு விசெஷ தோஷத்தைக் கூறுகிறார். ஆசாரம் விட்ட ப்ராம்ஹணன், வேதம் கற்றிருந்த போதிலும், அதன் பலனை அடையமாட்டான் என்று வஸிஷ்டர் கூறுகிறார். ஆசாரமில்லாதவன் ஆறு அங்கங்களையுடைய வேதம் முழுவதையும் கற்றிருந்த போதிலும், அவன் சாகும் காலத்தில் அவ்வேத சாஸ்த்ரங்கள் அவனுக்கு யாதொரு பலனையும் கொடாமல், இறக்கை முளைத்த பக்ஷிகள் தாம் இதுவரையில் வஸித்த கூட்டைத் திரும்பிப் பாராமல் ஓடிவிடுவதுபோல் ஓடிவிடும். ஒருவன் ஆசாரம் ஒன்றில்லாமல் எவ்வளவு கற்றிருந்த போதிலும் அவனை யாரும் மதிக்க மாட்டார்கள், என்பது நிச்சயமான அனுபவம். மண்டை-யோட்டிலிருக்கும் தீர்த்தமும், நாய்த்தோலால் செய்யப்பட்ட பையில் வைக்கப்பட்டாலும் எவ்விதம் ஸ்தானத்தின் தோஷத்தால் கெட்டுவிடுகிறதோ, அதுபோல ஆசாரமில்லாத வேதியனிடம் இருக்கும் வேதம் முதலியவைகளயும் ப்ரயோஜனமற்றதாகி விடும். மற்றும் ப்ராம்ஹணனுடைய இந்த தேகம் இவ்வுலகில் இப்போது ஸுகமனுபவிப்பதற்காக மாத்திரம் வந்ததில்லை. இங்கு வ்ரதம், நியமம், உபவாஸம், வேதகர்மம் இவைகளை அனுஷ்டித்து சுத்தியடைவதற்காகவே இந்த ப்ராம்ஹண சரீரம் ஏற்பட்டதென்று மற்றொரு ரிஷி கூறுகிறார். பின்னும்

ப்ருஹஸ்பதி:-

ஶௌயவீயாயாஹிக: தவொஜ்ஞாநவிவஜிக: ।

ஆசாரஹீந: ஶுக்ஷ்ஸ ஶாசூத்ஸஜ: ஸ்த: ॥

ஶௌர்யம், வீர்யம், பணம், தபஸ், ஞானம், ஆசாரம் இவைகளற்ற புத்திரன் புத்திரனல்ல; தாயின் மூத்ரத்திற்குச் சமம் என் கிறார். இங்கு பொதுவாய்க் கூறியிருந்தாலும் ஶௌர்யம் வீர்யமில்லாத க்ஷத்திரிய புத்திரனும், பணம் ஸம்பாதிக்கத் தெரியாத வைச்யக் குழந்தையும், தபஸ், ஞானம், ஆசாரமில்லாத ப்ராம்ஹண புத்திரனும் என்று அர்த்தம் கொள்ள வேண்டுமென்றும் வியாக்யாதா விரித்துக் கூறினர். பகவானே வர்ணங்களுக்கும் ஆச்ரமங்க-ளுக்கும் எந்த எல்லை என்னால் கட்டப்பட்டிருக்கிறதோ அதை எவர்கள் ஸரிவர அனுஷ்டிக்-கின்றனரோ அவர்களிடட்தில் எனது ப்ரீதி இருக்கும், என்று சொன்னார். இவ்விதம் ஆசாரத்தை அனுஷ்டிப்பது வருபவனுக்கு ப்ரயோஜனத்தையும் கூறினார்.

ஸ்ம்ருத்யந்த்ரத்தில்:-

யயெக்ஷுஹெதொஸ்லியம் நிஷெவிதம் த்ணா நி வஹீரவி வ வஹிஷதி ।

தவம் நரொ யஜவயெந வதயநு யஶஶ்வ காஶாம்ஶ்வ வஸூநி ஸொாஶ்ஸூதெ ॥

கரும்புக்கிரைத்த நீர் எவ்விதம் வழியில் புற்பூண்டுகளையும் வளர்க்கிறதோ அவ்விதம் தர்மமார்க்கத்திலேயே வழுவாமற் செல்லும் மனிதன் கீர்த்தி, விருப்பம், த்ரவியமிவைகளை அடைகிறான் என்று நாரதர் கூறுகிறார். ஆசாரமில்லாத ஜன்மம் பாழ். ஞானமில்லாத ஜன்மம் வீண். ஆசாரத்தை விட்டவன் புண்ய க்ஷேத்த்ரங்கள் சென்றாலும், புண்ய நதியில் மூழ்கினாலும், லட்சக்கணக்காக தானம் செய்தாலும், பல பல யக்ஞங்கள் செய்திடினும், அவனை அது ஒன்றும் காப்பாற்றாது. ஆகையால் ஆசாரமிருந்தால் கிட்டாததொன்றுமில்லை என்றும், ஆசாரம் விட்டவனுக்கு இஹம், பரம், இரண்டிலும் ஸுகம் கிடைக்காது என்பதும் சாஸ்த்ரங்களின் ஸித்தாந்தம். இதனால் வேதவிஹிதமான ஆசாரம் நமக்கு ஜீவாதாரமான பொருள் என்று தெரிகிறது.

ஸாயவ: க்ஷீணஜொஷா: ஸ்: ஸஜ்ஜ: ஸாயுவாவ: ।

தெஷாஶாவரணம் யத்து ஸஶாவாரஸ் உஷ்தெ ॥

ஸஶாவாரவதாம் ஶும்ஸாம் ஜிதௌ ஜொகாவுஹாவவி ॥

இதிலும் ஸதாசாரம் என்று சொல்வதொன்றுண்டு. தோஷமற்றவர்கள்தான் ஸாதுக்களெனப்படுவர். ஸத் என்றால் நல்லது என்று பொருள். அவர்கள் நடத்தை ஸதாசாரம் எனப்படும். இவ்விதம் ஸதாசாரமுள்ளவர்கள் இஹலோக பரலோகங்களை ஜயித்து வருகின்றனர்:-

யஸிந்ஜெஶெ ய ஆவார: வாரம்வயக்ஶமத: ।

ஶுதிஸ்த்விரொயெ ந ஸஶாவாரஸ் உஷ்தெ ॥

எந்த தேசத்தில் எந்த ஆசாரமானது பாரம்பர்யமாய் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதோ அதுவே ஸதாசாரம் எனப்படும். ஆனால் அவர்கள் அனுஷ்டித்து வந்தது ச்ருதி ஸ்ம்ருதிக்கு விரோதமா யிருக்கலாகாது என்று ஸம்ஸ்கார மஞ்சரியில் கூறிவிட்டுப் பின்னும் கூறுகின்றனர்.

நம்முன்னோர்களது சரீரங்களும் இந்த்ரியங்களும் தேஜோமயமானவை. அத்தகையவிடத்தில் தாமரையிலை ஜலம்போல் அதர்மம் கிஞ்சித் திருந்தாலும் பாபம்

அவர்களிடம் ஒட்டாமல் போய்விடும். உதாரணமாக, பெரிய காட்டுத்தீ ஒருபக்கம், பக்கத்தில் பெரிய நதி, சமீபத்தில் சிறு குட்டை உண்டென்று வைத்துக் கொள்வோம். பலமான காற்று ஒருஸமயம் அடித்தது. ஏராளமான மண்ணும் குப்பையும் காற்றால் கொண்டுவரப்பட்டு முற்றிலும் ஆற்றையும் காட்டையும் குட்டையையும் நிறப்பிவிட்டது. இதனால் நேர்ந்த-தென்னவென்றால் காட்டுத்தீ இன்னும் உக்கிரம் முகுந்த தேஜஸ்ஸுடன் கிளம்பி குப்பைய எறித்து விட்டது. நதியோ தன்னுடைய ப்ரவாகத்தின் வேகத்தால் எல்லா குப்பை கூளங்களையும் அடித்து ஸமுத்திரத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டது. சிறு குட்டையின் கதி என்னவாயிற்று என்று பார்த்தால் குப்பை கூளங்களால் மூடப்பட்டுச் கொஞ்சநஞ்சமிருந்த ஜலமும் மூடப்பட்டுவிட்டது. இதுபோல் உத்தமர், மத்திமர், அதர்மர்களை அறிய வேண்டும். இதை அனுஸரித்தே போதாயனரும், முனிவர்களும், தேவர்களும் ஏதாவது ஒரு அதர்மத்தைச் செய்துவிடினும், மனுஷ்யர்களாகிய நாம் அந்த அனுஷ்டானம் செய்யக்கூடாதென்றார். யாக்ஞவல்க்யர் ஸ்வர்கத்தைக் கொடுக்காததும் வேத விகிதமாகினும் உலகில் வெறுப்பைக் கொடுக்கக்கூடியதுமான தர்மத்தை அனுஷ்டிக்கலாகாதென் கிறார். இத்தகைய அனுஷ்டா-னத்திற்கு நிச்சயமாய் வழிகாட்டி ஒருவர் வேண்டும். இல்லாவிடில் எங்கேயாவது பாழுங் கிணற்றில் விழுந்துவர்களாவோம், என்பதை ஆலோசித்துதான் கருணையோடு மகர்ஷிகள் வேத ரஹஸ்யங்களை தவத்தால் கண்டு சாஸ்த்ர ரூபமாய் எழுதிவைத்திருக்கிறார்கள். அதனை நாம் சாஸ்த்ரமென்று மட்டிலும் அழைப்பதில்லை. தர்ம சாஸ்த்ரமென்று அழைக்கிறோம். அது தர்மத்தையேதான் கூறும். அதர்மத்தை விலக்குவதற்காக அதன் ஸ்வரூபத்தையும் வெளியிடும். ஆகவே அனுஷ்டானத்திற்கு தர்ம் சாஸ்த்ரந்தான் முக்கியம்.

ஆசாரம் என்பது ஸ்நானம் செய்து, காய்ந்த வஸ்திரம் தரிப்பது மாத்திரமல்ல. அதில் **சுத்தி, ச்ரத்தை, பக்தி** முதலியதும் அடங்கி இருக்கிறது. சுத்தி என்பது சுத்தமான தீர்த்தத்தில், அதாவது ஸமீபத்தில் நதி இருந்தால் நதியிலும், நதி இல்லாவிக்கால் மாத்திரம் தடாகத்திலும், தடாகமும் இல்லாவிட்டால் மாத்திரம் கிணற்றிலும், ஸ்நானம் செய்யவேண்டும். அப்படி ஸ்நானம் செய்வதும் ஸூர்யோதயத்திற்குமுன் ஸங்கல்பபூர்வமாய் வருணஸூக்தம், அகமர்ஷண மந்த்ரம் முதலியதுகளைச் சொல்லி புண்ய நதிகளையும், அந்தந்த புண்ய ஸ்தலத்தினுடைய ஈச்வரனுடைய நாமாவை த்யானம் செய்து, நதியாகவிருந்தால் ஜலத்திற்கு எதிர் முகமாகவும், தடாகமாயிருந்தால் ஸூர்யன் இருக்கும் திக்கு நோக்கியும் ஸ்நானம் செய்து, சுத்தமான வஸ்த்ரத்தைத் தரித்துக்கொண்டு, ஜபம், ஹோமம், பூஜை முதலியவைகளை சாஸ்த்ரத்தில் சொல்லியபடி விதிவத்தாய்ச் செய்து, யாராவது அதிதிகளிருந்தால் அவர்களையும் வைத்துக்கொண்டு ஆஹாரம் செய்ய வேண்டும். ஸ்நானம், ஜபம், பூஜை முதலிய கார்யங்கள் செய்யும் பொழுது மௌனமாயும், கர்மாவில் ச்ரத்தையோடும், பக்தியோடும் செய்யவேண்டும். நமது வீட்டுக்கு வந்த விருந்தாளிக்கு எவ்வளவோ வித விதமான பதார்த்தம் செய்து போட்டாலும், அன்பும், ப்ரியமான வார்த்தையும் இல்லாவிட்டால் விருந்தாளிக்கு எப்படி த்ருப்தியுண்டாகாதோ அப்படியே பக்தி ச்ரத்தையில்லாமல் எவ்வளவு தானம் தர்மம் செய்தாலும் யாதொரு ப்ரயோஜனமும் உண்டாகாது. ஆகையால் பாஹ்ய சுட்தியோடு அந்தக்கரண சுத்தியும் இருக்கவேண்டும். அதாவது நல்ல கார்யத்தில் (சாஸ்த்ர ஸம்மதமான) பக்தியுடன், ச்ரத்தையுடனும் மனச்சந்துஷ்டியோடும் செய்யவேண்டும்.

சுத்தி என்பது ஸ்நானம் செய்வது மாத்திரமல்ல வென்று முன்னமே சொல்லப் பட்டிருக்கிறது. **ஆகாரசுத்தியும்** வேண்டும். ஆகாரசுத்தி இருந்தால்தான் மனச்சுத்தி ஏற்படும். கண்ட இடத்தில் கண்ட ஆகாரத்தைச் சாப்பிக்கால் என்ன சுசி ருசியாயிருந்தாலும் நம்மை நல்லவழியில் போகவிடாது. போடும் எருவுக்குத் தகுந்தபடி பயிர் வ்ருத்தியாவதுபோல், நாம் சாப்பிடும் ஆகாரத்திற்குத் தகுந்தபடிதான் புத்தியும் ப்ரவ்ருத்திக்கும். ஆகையால் ஒவ்வொரு-

வருக்கும் ஆகாரத்திலும் நியமம் வேண்டும். சாஸ்த்ரத்தில் நிஷேதித்திருக்கிற ஆகாரங்களை எந்த ஸந்தர்ப்பத்திலும் விலக்கவேண்டும். அப்படி ஏதாவது ஒரு ஸமயம் பிறர் வீட்டில் சாஸ்த்ரத்தால் விலக்கப்பட்ட பதார்த்தம் ஏதாவது போடப்பட்டுவிட்டால், வீட்டுக்காரர் ஏதாவது நினைக்கப் போகிறார் என்கிற வீண் தப்பெண்ணத்தாலோ, அல்லது நமது நாக்கை அடக்கமுடியாத காரணத்தினாலோ, சாப்பிட்டு விடக்கூடாது. எவ்வளவு உயர்ந்த பதார்த்தம் சாப்பிட்டாலும் அது அப்படி எப்போதும் வயிற்றிலிருந்து கொண்டு நமக்கு மறுபடி பசிக்காம-லிருக்கப் போவதில்லை. நாம் சாப்பிடுவது பசியைத் தணிப்பதற்காகவே. ஒருக்ஷணம் தோன்றுவதும் நாக்கின் ருசிக்காக கண்ட பதார்த்தங்களை சாப்பிட்டு வந்தால் எத்தனை சாஸ்த்ரம் வாசித்தாலும், எவ்வளவு சுசியாயிருந்தாலும், நமது வயிற்றில் விழுந்த கெட்ட ஆகாரமானது நம்மை நல்லவழியில் ப்ரவ்ருத்திக்க விடவே மாட்டாது. ஆகையால் எல்லாவற்றிலும் முக்கியமாக நாம் அனுஷ்டிக்க வேண்டியது ஆகாரநியமம். ஆகாரத்தில் மூன்று வகை. ஸாத்விக, தாமஸ, ராஜஸம் என்பது. மனிதர்களுக்கு உத்வேகத்தைக் கொடுக்கக் கூடிய ஆகாரங்களைக் கூடுமானவரையில் விலக்க வேண்டும். ஸாத்விகமான, சாஸ்த்ரீயமான ஆகாரத்தையே சாப்பிடவேண்டும். அப்படியே ஒருவன் இருந்தானானால் அவனால் ஸாதிக்கக்கூடாதது ஒன்றுமே இராது.

ஒரு மனிதனுக்கு ஏற்படும் குண விசேஷங்களுக்கு பல காரணங்களுண்டு. சாதாரணமாய் ஒருவன் ஸுகசாலியாயும், தர்மவானாயும் இருந்தால் பூர்வஜன்ம புண்யத்தினால் அப்படி இருக்கிறான் என்று நினைக்கிறோம். ஒருவன் கஷ்டப்பட்டால் பூர்வஜன்மத்தில் பாபம் செய்திருக்கிறான், அதனால் கஷ்டமனுபவிக்கிறான் என்று சொல்லுகிறோம். ஒருவாறு அவன் ப்ரவ்ருத்தி கர்மானுஸாரமாயிருந்தாலும் அதுமாத்திரம் காரணம் என்று சொல்லிவிடமுடியாது. அதுவே நிச்சயமானால் யாதொரு நல்ல முயற்சியும் செய்ய அவச்யமே இல்லாமற் போய்விடும்.

ஆகையால் எல்லோரும் சாஸ்த்ர ஸம்மதமான கார்யத்திலேயே ஈடுபடவேண்டும். துர்ஜனன் ஒருவன் பந்தியில் உட்கார்ந்திருக்கும் பொழுது அவனோடு நாமும் சேர்ந்து சப்பிட்டோமானால் அந்தப் பந்தியில் உள்ள அவ்வளவு பேரையும் அவன் கெடுத்துவிடுவான் என்று ஸ்ரீ மகாபாரத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அவன் பார்வைக்கே அவ்வளவு தீக்ஷண்யம் இருந்தால் அவனோடு சேர்ந்து பழகுவதும் சாப்பிடுவதும் அவனால் செய்யப்பட்ட பதார்த்தங்களை சாப்பிடுவதும் எவ்வளவு தீங்கு செய்யும் என்பதை யோசிக்கவேண்டும்.

நம் சாஸ்த்ரமானது நம்முடைய க்ஷேமத்திற்கும் ஸௌக்யத்திற்கும் ஏற்பட்டதே தவிர, நமக்கு கஷ்டம் உண்டுபண்ணுவதற்கல்ல. ஸூர்ய உதயத்துக்கு முன் ஸ்நானம் செய்வது நமது சரீர ஆரோக்யத்திற்காகவும், அதன் மூலம் நமக்கு சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட நித்ய கர்மாவை அனுஷ்டிப்பதற்காகவும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ஆகார நியமமும் அப்படியே. ஒருவன் ஸூர்ய உதயத்திற்குமுன் பஞ்ச பஞ்ச உஷக்காலத்தில் அதாவது விடிய ஐந்து-நாழிகைக்குமுன் எழுந்து, ஸ்நானம் செய்து அர்க்யத்தை அருணோதயகாலத்தில் விட்டு, ஸூர்யோதயம் வரையில் காயத்ரீ ஜபத்தை மௌனமாய்ச்செய்து, அதன் பிறகு அக்னியை ஆதரித்து (ஔபாஸனம்), பிறகு பூஜை, வைச்வதேவம், அதிதி ஸத்காரம் செய்து, ஸாத்விகமான ஆகாரத்தைச் சாப்பிட்டு வந்தானானால் அவன் ஆரோக்ய த்ருடகாத்ரமாய், நோய் நொடி இல்லாமல், வெகுகாலம் இப்போதும் ஜீவித்திருக்கமுடியும். நமது முன்னோர்கள் அப்படி நடந்துதான் வெகுகாலம் சந்தோஷமாயும், சந்துஷ்டியாயும் வாழ்ந்து வந்தார்கள்.

நாமோ வண்ணான் வெளுத்துத் கொண்டுவந்து கொடுத்த மடி கட்டிக்கொண்டும், ரயில், பஸ் முதலியவைகளில் ஸகலமான ஜனங்களுடன் உட்கார்ந்துகொண்டும், அந்த வேஷ்டி, சட்டை முதலியவற்றை மாதக்கணக்காய் தோய்க்காமல் அதையே திருப்பிக் கட்டிக்கொண்டும், காலை 8-மணிக்கு எழுந்து ஸ்நானம் செய்யாமலும், வேறு எந்தவிதமான கர்மானுஷ்டா-னங்களும் இல்லாமலும், காபி முதலியவைகளைக் குடித்தும், பிறகு நினைத்த ஹோட்டலில் கண்ட ஆகாரத்தைக் கண்டவர்களுடனும் உட்கார்ந்து சாப்பிட்டும் வருவதில் ஆரோக்யம் கெட்டு, நமக்கு சக்தி, தேஜஸ் எல்லாம் போய் நடைப் பிணம் மாதிரி ஜீவித்து வருகிறோம். நமக்கு எந்த டாக்டர்களாலும் கண்டுபிடிக்க முடியாத பல பல வ்யாதிகளும் துன்பங்களும் ஏற்பட்டு வீணாகிறோம். நமது முன்னோர்கள் எவ்வளவோ திடகாத்திரமாயும் ஆரோக்யமாயும் இருந்தார்கள் என்பது நமக்கே நன்றாய்த் தெரிந்திருந்தும், அவர்கள் எந்த முறையினால் அப்படி இருந்தார்கள் என்பது தெரிந்தும், நாம் அதை அனுஸரிக்காமல், ஸகல விஷயங்-களிலும் மேல் நட்டாரிடம் உள்ள மோகத்தால் அவர்கள் வழக்கங்களை அனுஷ்டித்து நாசத்தை அடைந்து வருகிறோம். ஆனால் அவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களை மாத்திரம் நாம் பின்பற்றுவதில்லை. மேல் நாட்டவர்கள் வசிப்பது குளிர்தேசம். நாம் இருப்பது உஷ்ணதேசம். அந்தந்த தேசத்திற்குக் தகுந்தபடி ஆசார அனுஷ்டானக்களும், பழக்க வழக்கங்களும் நமது முன்னோர்களால் ஏற்படுத்தப் பட்டிருக்கும்போது, அதைவிட்டுத் தப்பான வழியில் ப்ரவேசித்து நாமும் இப்போது கெட்டதல்லாமல், ஸந்ததிகளையும் கெடுத்து, நமது ஸமூகத்தையும் கெடுத்து வருகிறோம். கண்கெட்ட பிறகு ஸூர்ய நமஸ்காரம் என்பதுபோல் நம்முடைய ஆசார அனுஷ்டானங்களையும் விட்டு, சுத்தி என்பது இன்னது என்று தேரியாமல், கேவலஸ்திதியை அடைந்து, கஷ்டதசை ஏற்பட்டிருக்கும் இக்கலத்திலாவது சொஞ்சம் ஆலோசித்து, முன்னோர்கள் அனுஷ்டித்து வந்த அனுஷ்டானங்களை அனுஷ்டித்து மேன்மையடைய ஈசன் நமக்கு நல்ல புத்தியைக் கொடுப்பாராக.

இப்படிக்கு,
வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையோம்.

---

Veda Dharma Sastra Paripalana Sabha was commenced with the Blessings of Pujyasri Chandrasekharendra Saraswathi Shankaracharya Swamiji in the year 1942 with the objective of protecting and propagating the Dharmas through various means including publications. The Sabha is continuing to perform various activities like conducting Veda Sammelans and Vidwat Sadas etc. in various towns and cities, with the Blessings of Pujyasri Jayendra Saraswathi Shankaracharya Swamiji and Pujyasri Sankara Vijayendra Saraswathi Shankaracharya Swamiji.

As ordained by His Holiness Sri Sankara Vijayendra Saraswati Swamigal, Shri Kanchi Kamakoti Peetham, reprinted by Sri V.N.Gopalakrishna Rao. Similar articles including this reprint can be accessed at Kanchi Kamakoti website: http://www.kamakoti.org/tamil/